BRAMPTON **Service and Information Update**

# ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகளில் கட்டாயமாக முக கவசம் அணிவது ஜூன் 11 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 25, 2022) – ஏப்ரல் 22 ஆம் தேதி அறிவிக்கப்பட்ட ஒன்ட்டாரியோ அரசாங்க வழிகாட்டுதல்களின் பேரில், அனைத்து பேருந்துகளிலும், பேருந்து முனையங்களின் உள்ளேயும், கட்டாயமாக முக கவசம் அணிவது ஏப்ரல் 27 முதல் ஜூன் 11 நள்ளிரவு வரை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தினால் நீட்டிக்கப்படுகிறது. அனைத்து பேருந்துகளிலும், பேருந்து முனையங்களின் உள்ளேயும், பயணிகள் கட்டாயமாக முக கவசம் அணிவது அவசியமாகும்.

முக கவசங்கள் அவரவர் வாய், மூக்கு தாடையை மறைத்திருப்பது அவசியம் என பயணியர் நினைவூட்டப்படுகிறார்கள். பயணிகள் தங்கள் வசம் கை சானிட்டைஸரை வைத்திருந்து, கைகளை அடிக்கடி கழுவியபடி பாதுகாப்பாக இருக்குமாறும் மற்றும் மற்றவர்களைக் காக்குமாறும் நினைவூட்டப்படுகிறார்கள்; மற்றும் உடல் நலமில்லாததாக உணர்ந்தால் வீட்டிலேயே தங்கிவிடுமாறு வேண்டப்படுகிறார்கள்.

நமது பயணிகள் மற்றும் பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மிக உயர்ந்த முன்னுரிமையாக கொள்ளப்படுகிறது. ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பிராந்திய பொது சுகாதாரம், ஒன்ட்டாரியோ அரசாங்கம் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரகால மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருங்கிப் பணியாற்றிவருகிறது.

புது செய்திகளுக்காக www.bramptontransit.com க்கு வருகை தாருங்கள் அல்லது ட்விட்டரில் புது செய்திகளுக்காக @bramptontransit ஐப் பின்பற்றுங்கள். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொடர்பு அலுவலகத்தை 905.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca